FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364186

1. District மாவட்டம்: கள்ளக்குறிச்சி PS: வி.ஏ.5.ப. பிரிவு காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No. முதஅ எண்: 66/2026 Date நாள்: 23.07.2026

2. (I) Act சட்டம்: The Prevention of Corruption, Sections பிரிவுகள்: 7, 12 r/w 7
(II) Act சட்டம்: Act 1988, As Amended by the Sections பிரிவுகள்:
(III) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(Iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 22.07.2026 Date to : நாள் வரை 22.07.2026
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 11.00 hrs Time to : நேரம் வரை 18.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.07.2026 Time : நேரம் 10.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL-II Time : நேரம் 10.00 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 20 கி.மீ. தென் மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி சின்னசேலம் (சிறப்பு நிலை) பேரூராட்சி அலுவலகம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. சிவசங்கரன் குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : திருவண்ணாமலை தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் அலுவலர் கூடுதல் பொறுப்பு (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம் கூடுதல் பொறுப்பும் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. சரவணன், முன்னாள் நிலநிலை உதவியாளர் சின்னசேலம் (சிறப்பு நிலை) பேரூராட்சி அலுவலகம் தற்போது நிலநிலை உதவியாளர் பேரூராட்சி அலுவலகம் கீயகதிகம் 2. செல்வி. ரசிகா கணினி இயக்குபவர் (ஒப்பந்தம்) சின்னசேலம் (சிறப்பு நிலை) பேரூராட்சி அலுவலகம் மற்றும் பலர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனிக்காளில் இணைக்கப் பட்டுள்ளது

—

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

23/7/26

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

23.07.2026

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.07.2026, 13.30 hrs

Name: பெயர் K. SATHIYARAJ
Rank: நிலை DSP ..... No. எண் .....
VAC, KALLAKURICHI

கள்ளக்குறிச்சி ஊ.த.க.பிரிவு குற்ற எண்.08/2026, u/s 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12 இன் விபரம்.

பணிந்து அனுப்பப்படுகிறது, அம்மையீர், நான் இன்று 23.07.2026-ந் தேதி சுமார் 10.00 மணியளவில் நிலைய அலுவலில் இருந்தபோது கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட கூடுதல் ஆய்வுக்குழு அலுவலர் திரு.சிவசங்கரன் த/பெ கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கொடுத்த புகார் மனுவை பெற்று 23.07.2026, 12.00 மணிக்கு கள்ளக்குறிச்சி ஊ.த.க பிரிவு குற்ற எண்.08/2026/KLK, u/s 7, 12 r/w 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. வாதி கொடுத்த புகார் மனுவின் விபரம் அனுப்புநர் சிவசங்கரன், கூடுதல் ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கள்ளக்குறிச்சி. ந.க.எண்:ஆகு1/392/2026, நாள்.23.07.2026 ஐயா, பொருள்: திடீர் ஆய்வு - கள்ளக்குறிச்சி மாவட்டம் - சின்னசேலம் (சிறப்பு நிலை) பேரூராட்சி அலுவலகம் - 22.07.2026 கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு - புகார் கொடுத்தல் - தொடர்பாக:- பார்வை:திடீர் ஆய்வு -மகஜர் நாள்:22.07.2026 கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட கூடுதல் ஆய்வுக்குழு அலுவலர் திரு.சிவசங்கரன் த/பெ கிருஷ்ணமூர்த்தி ஆகிய எனக்கு சின்னசேலம் (சிறப்புநிலை) பேரூராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் சின்னசேலம் (சிறப்பு நிலை) பேரூராட்சி உட்பட்ட பகுதிகளில் முடிக்கப்பட்ட அரசு ஒப்பந்த பணிகளுக்கான பட்டியல்களுக்கு, செலவீணம் மேற்கொள்ளப்பட்டு அந்த பணிகளை முடித்த ஒப்பந்ததாரர்களிடமிருந்தும், திட்ட பணிகள் மற்றும் பராமரிப்பு பணிகள் போன்ற பணிகளுக்கான ஒப்பந்ததாரர்களிடமிருந்தும், குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவது தொடர்பாகவும், புதிய கட்டிட திட்டங்களுக்கு அனுமதி வழங்குதல் மற்றும் புதிய மனைபிரிவு அனுமதி வழங்குதல் தொடர்பாக அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடமிருந்து அலுவல் நேரத்தில் கையூட்டு பெறுவதாக கிடைத்த நம்மகமான தகவலின்படி நான் கள்ளக்குறிச்சி ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவுக்கு சுமார் 10.00 மணிக்கு சென்று அங்கு பணியில் இருந்த திரு.சத்தியராஜ், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம், சின்னசேலம் (சிறப்புநிலை) பேரூராட்சி அலுவலகத்தை திடீராய்வு செய்வது குறித்து கலந்தாலோசித்து நானும் காவல் துணை கண்காணிப்பாளரும், ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் குழுவினருடன் உடனடியாக அரசு வாகனங்களில் புறப்பட்டு சுமார் 10:45 மணியளவில் சின்னசேலம் (சிறப்பு நிலை) பேரூராட்சி அலுவலகத்திற்கு சற்று வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். அதனை தொடர்ந்து காலை சுமார் 11.00 மணியளவில், மேற்படி கள்ளக்குறிச்சி to சேலம் ரோட்டிற்கு கிழக்கு பக்கத்தில் மேற்குபார்த்தவாறு அமைந்திருந்த சின்னசேலம் சிறப்பு நிலை பேரூராட்சி அலுவலகத்தினுள் சென்றபோது, மேற்படி அலுவலகத்தின் அறையின் வெளியில் உள்ள வராண்டாவில் பின்னர் விசாரணையில் பெயர் விலாசம் தெரிந்த 1) திரு.சாகாதேவன் த/பெ பெரியசாமி,. தூய்மை பணியாளர் (தற்காலிகம்) 2) திரு.முருகன் த/பெ அயல்ராஜ், தூய்மை பணியாளர் (தற்காலிகம்) 3) திரு.மகேஸ்வரன் த/பெ இரத்தினம், தூய்மை பணியாளர் (தற்காலிகம்) 4) திரு.விஜயராஜா த/பெ அங்கமுத்து 5) திரு.இளஞ்செழியன் த/பெ பொன்னுசாமி 6) திரு.வேலுமணி த/பெ அழகன் மற்றும் 7) திரு.யாகூப் த/பெ பாஷா அலுவலக உதவியாளர் 8) திரு.கதிர்வேல் த/பெ சதாசிவம், தனியர் 9) திரு.நாகராஜ், காந்திநகர், சின்னசேலம் ஆகியோர் இருந்தனர், அவர்களை அப்படியே வராண்டாவில் அமரச்செய்து அவர்களை கண்காணிக்க ஒரு காவல் அலுவலரை

நியமித்துவிட்டு, நான் ஆய்வுக்குழுவிருடன் சின்னசேலம் சிறப்பு நிலை பேரூராட்சி அலுவலகத்தின் வரண்டாவின் வடக்கு பக்கம் இருந்த அறையின் உள்ளே சென்று, அங்கு அமர்ந்திருந்த நபரை விசாரிக்க, தான் சின்னசேலம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.செ.கணேசன் என்று சொன்னார். பின்னர் அவரிடம் எங்களையும், காவல் குழுவினரையும் எங்களது அடையாள அட்டை காண்பித்து அறிமுகம் செய்துகொண்டோம். பின்னர் அவரை பற்றி விசாரிக்க தன் பெயர் திரு.செ.கணேசன், வயது 59/202, செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலகம், சின்னசேலம் என்றும், தான் கிருஷ்ணா நகர், குறால் ரோடு, சின்னசேலம் என்ற முகவரியில் வசித்து வருவதாக சொன்னார். பின்னர் நானும், காவல் குழுவினரும் மேற்படி செயல் அலுவலர் திரு.கணேசன் முன்னிலையில், எங்களை சுயபரிசோதனை செய்து காண்பித்து எங்களிடம் பணமோ பொருளோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். பின்னர் அவரிடம் மேற்படி அலுவலகத்தை ஆய்வு செய்ய போகும் விவரத்தை தெரிவித்து ஆய்வின் போது உடனிருக்குமாறு அறிவுறுத்தினேன். அதற்கு அவர் நான் ஒத்துழைப்பு தருவதாக தெரிவித்தார். அதனை தொடர்ந்து மேற்படி பேரூராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களின் பிரதான அறைக்கு சென்றபோது, மேற்படி அறையின் வடமேற்கு மூளையில் இருந்த இருக்கையில் திரு.ராம்குமார் த/பெ பாண்டியன், பதிவறை எழுத்தரும் அவருக்கு, கிழக்கு புறம் இருந்த இருக்கையில் திரு.சரவணன், த/பெ வேலு, இளநிலை உதவியாளரும், அவருக்கு நேர் எதிர்தாற்போல் மேற்கு பார்த்து இருந்த இருக்கை திருமதி.பிரேமலதா, மக்கள் தொகை கணக்கெடுப்பாளருடையது என்றும், அவர் இன்று விடுப்பில் உள்ளார் என்றும், மேற்படி இருக்கைக்கு இடது புறம், மேற்கு பார்த்து திருமதி.விஜயலட்சுமி க/பெ சித்தாராமன், இளநிலை உதவியாளரும், அவருக்கு இடது புறம் கடைசியாக திருமதி.உத்திரியமேரி க/பெ லியோசாலமன், தட்டச்சர் என்பவரும், அவருக்கு நேர் எதிர்த்தாற்போல் இருந்த இருக்கை காலியாகவும், மேற்படி இருக்கைக்கு வலது புறம் வடக்கு பார்த்த இருந்த இருக்கை திரு.வைத்தியலிங்கம் த/பெ ஆறுமுகம், தலைமை எழுத்தரும் இருந்தனர். அதனை தொடர்ந்து சின்னசேலம் பேரூராட்சி (சிறப்பு நிலை) அலுவலகத்தின் பிரதான அறைக்கு தெற்கு புறம் இருந்த வரி வசூளிப்பாளர் அறைக்கு சென்றபோது, அவ்வறையின் தென்மேற்கு மூளையில், திரு.பெரியசாமி த/பெ செவலை, வரி வசூலிப்பாளரும், அவருக்கு நேர் எதிர்தார்போல் மேற்கு பார்த்தவாறு செல்வி.ரசிகா த/பெ சௌந்தர்ராஜன், கணினி இயக்குபவர் (தற்காலிகம்), மேற்படி அறையின் தென்கிழக்கு மூளையில் இருந்த கணிணிஅறையில் திரு.ஆறுமுகம் த/பெ கதிர்வேல் தரவு உள்ளீட்டாளரும்(தற்காலிகம்) இருந்தனர். அதனை தொடர்ந்து இவ்வலுவலகத்தின் வடகிழக்கு மூளையில் இருந்த அறைக்கு சென்று பார்த்தபோது அங்கு செல்வி காவியா த/பெ ராஜேந்திரன், இளநிலை பொறியாளர் என்பவர் அமர்ந்திருந்தார். அதனை தொடர்ந்து சின்னசேலம் சிறப்பு நிலை பேரூராட்சி அலுவலகத்தில் வரண்டாவில் இருந்த பெண் அலுவலர்களை, இப்பிரிவு பெண்காவலர் திருமதி.தேவிகா அவர்கள் தற்செயல் விடுப்பில் உள்ளதால், சின்னசேலம் காவல் ஆய்வாளரை தொடர்பு கொண்டு மேற்படி சோதணைக்கு உதவியாக இருக்க ஒரு பெண்காவலரை அனுப்ப கோரியதன் பேரில், ஆஜரான பெண் தலைமை காவலர் திருமதி.சிவசங்கரி உதவியுடனும் மற்ற அலுவலர்களை காவல் குழுவினரை வைத்து சோதனை செய்ததில், திரு.மகேஸ்வரன் த/பெ இரத்தினம் தூய்மை பணியாளர் (தற்காலிகம்) என்பரிடம் ரூ.2,250/-ம் மற்றும் திரு.கதிர்வேல் த/பெ சதாசிவம் என்பரிடம் ரூ.6,500/-ம் இருந்தது. அவர்களை தனிதனியாக விசாரணை செய்ததில் திரு.மகேஸ்வரன் த/பெ இரத்தினம் என்பவர் தான் இன்று காலை வசூல் செய்த தண்ணீர் வரி தொடர்புடைய

பணம் என்று கூறியதால், உரிய தரவுகளுடன் ஒப்பீடு செய்து பார்த்ததில் சரியாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.2,250/- அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் திரு.கதிர்வேல் த/பெ சதாசிவம் என்பவரை விசாரணை செய்ததில் அது தனது மனைவியின் மருத்துவ செலவிற்காக வைத்திருந்ததாக கூறிதால், மேற்படி பணம் ரூ.6,500/- அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அலுவலகத்தில் இருந்த அரசு அலுவலர்களையும், தினக்கூலி அடிப்படையில் பணிபுரியும் பணியாளர்களை அவரவர் இருக்கையில் வைத்து அவரையும், அவரது இருக்கையும் சோதணை செய்ததில் அவர்கள் வசம் சந்தேகபடக்கூடிய வகையில் பணமோ, ஆவணமோ ஏதும் இல்லை. மேற்படி அலுவலகத்தின் வரி வசூலிப்பாளர் திரு.பெரியசாமி த/பெ செல்வராசு அவரது இருக்கையை சோதணை செய்ததில் அவரிடம் ரூ.1,75,713/- இருந்தது. அதனை பற்றி கேட்க, நானும், வரிவசூலிப்பாளர் திருமதி.சத்யா அவர்களும் நேற்றைய (21.07.2026) 'தினம் வசூல் செய்த வரி வசூல் தொகை என்று சொன்னார். அதற்கான தரவுகளை ஒப்பிட்டு பார்த்தபோது சரியாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.1,75,713/- அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதணை தொடர்ந்து பின்னிட்டு அலுவலகத்திற்கு வந்த திரு.தாமஸ், வரி வசூலிப்பாளரை சோதணை செய்த போது அவரிடம் ரூ.17,726/- இருந்தது. அதை பற்றி அவரிடம் கேட்க, அவர் நேற்றைய (21.07.2026) தினம் வசூல் செய்த வரி வசூல் தொகை என்று சொன்னார். அதற்கான தரவுகளை ஒப்பிட்டு பார்த்தபோது சரியாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.17,726/- அவர் வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதணை தொட்ர்ந்து அலுவலகத்தில் பணிபுரியும் தற்காலிக பணியாளர் . செல்வி ரசிகா என்பவரை சோதணை செய்ததில் அவரிடம் சந்தேகிக்கும் வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. ஆனால் கிடைக்க பெற்ற இரகசிய தகவல் அடிப்படையில் அவரது கைபேசியிலிருந்த UPI பரிவர்த்தணைகளை பார்வையிட்டதில் அதில்

வ.எண்.	மாதம்	தொகை
1.	ஜீன்	ரூ.53,036/-
2.	மே	ரூ.1,11,030/-
3.	ஏப்ரல்	ரூ.1,66,305/-
4.	மார்ச்	ரூ.3,24,870/-
5.	பிப்ரவரி	ரூ.1,60,350/-
	மொத்தம்	**ரூ.8,15,591/-**

மேற்கண்டுள்ளவாறு கடந்த 05 மாதத்தில் ரூ.8,15,591/- வரவு மட்டுமே வைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதனை பற்றி கேட்டபோது அவர் ஏற்கனவே இவ்வலுவலகத்தில் பணிபுரிந்து, தற்போது தியாகதுருகம் பேரூராட்சி அலுவலகத்திற்கு பணிமாறுதலில் சென்ற திரு.சரவணன், இளநிலை உதவியாளர் அவ்வப்போது அவரும், அவருக்கு தெரிந்த மற்றும் தெரியாத நபர்களிடமிருந்து தனது வங்கி கணக்கிற்கு பணம் போடா சொல்ல பிறகு தன்னை எடுத்து கொடுக்க சொன்னதாகவும் சொன்னார். மேற்படி எதற்காக யாரிடம் பெறுவார் என்று விசாரித்தபோது அவர் முன்னுக்கு பின் முரனாக பதில் அளித்தார். எனவே மேற்படி தரவுகளின் விவரம் மகஜரில் குறித்து கொள்ளப்பட்டு அவரது கைபேசி அவர்வசமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து சின்னசேலம் சிறப்பு நிலை பேரூராட்சி அலுவலகத்தின் மற்ற அறைகளான பதிவறை, உணவு அருந்தும் அறை, இதர அறைகள் மற்றும் அலுவலகத்தின் வளாகத்தில் இருந்த இருசக்கர மற்றும் நான்கு சக்கர

வாகணங்களை சோதணை செய்ததில் கைப்பற்ற கூடிய பணமோ, பொருளோ ஏதும் இல்லை. அதணை தொடர்ந்து சின்னசேலம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு.கணேசன், தற்காலிக பணியாளர் செல்வி ரசிகா மற்றும் தனிநபர் திரு.கதிர்வேல் ஆகியோர்களிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து சின்னசேலம் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களிடம் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் வருகை பதிவேடு மற்றும் இதர பதிவேடுகளை பற்றி கேட்டபோது வருகை பதிவேடு-2026 மற்றும் தனிநபர் கையிருப்பு பதிவேடு (Personal Cash Register) ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவற்றை பார்வையிட்டு அவர் வசமே திருப்பி ஒப்டைக்கப்பட்டது. பின்னர் கொடி நாள் வசூல் குறித்து சின்னசேலம் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கேட்டபோது, இவ்வலுவலகத்தில் கொடிநாள் வசூல் ஆன்லைன் மூலம் வசூலிப்பதாவும், தனியாக பதிவேடு ஏதும் பராமரிக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். இந்த திடீராய்வின்போது அலுவலர்கள் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். அலுவலக பெண் ஊழியர்கள் சின்னசேலம் காவல் நிலையை பெண் தலைமை காவலர் (WHC 586) திருமதி.சிவசங்கரி என்பவர் உதவியுடன் விசாரணை செய்யப்பட்டார்கள். மேலும் அலுவலக உடமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் கள்ளக்குறிச்சி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீராய்வு மகசர் இன்று 22.07.2026-ம் தேதி சுமார் 11.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 22.07.2026-ம் தேதி சுமார் 18.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீர் ஆய்வு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் செல்வி.ரசிகா கைபேசியிலிருந்து UPI பரிவர்த்தணைகள் மூலம் மேற்கண்ட 05 மாத்த்தில் மட்டும் ரூ.8,15,591/- வரவுவைக்கப்பட்டுள்ளது. அத்தரவுகளை பார்வையிட்டதில் அதிகபடியான பணம் ஏற்கனவே சின்னசேலம் (சிறப்புநிலை) பேரூராட்சி அலுவலகத்தில் பணிபுரிந்து, தற்போது தியாகதுருகம் பேரூராட்சி அலுவலகத்திற்கு பணிமாறுதலில் சென்ற திரு.சரவணன், இளநிலை உதவியாளர், அவருக்கு தெரிந்த மற்றும் தெரியாத நபர்கள் மூலம் அனுப்பப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும் மேற்படி பரிவர்த்தனைக்கு செல்வி.ரசிகாவால் சரியான விளக்கமோ, முகந்திரமோ கூற இயலவில்லை என்பதால், மேற்படி இணைய வழியில் பரிவர்த்தனை செய்யப்பட்ட பணம் மேற்படி அலுவலக அலுவலர்கள், அலுவல் பணி ஆற்றியதற்கு முறையற்ற வழியிலும், நேர்மையற்ற முறையிலும், அனுகூலமாகவோ, பிரதிபலனர்கவோ பெற்றிருக்ககூடும் என்று சந்தேகிபதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாலும், திரு.சரவணன், முன்னாள் இளநிலை உதவியாளர், சின்னசேலம் (சிறப்புநிலை) பேரூராட்சி அவர்கள் மீதும் அவருக்கு மேற்படி இணைவழி இலஞ்ச பரிவர்த்தனைக்கு உடந்தையாக இருந்த செல்வி.ரசிகா மீதும் மேலும் அதில் தொடர்புள்ள மற்ற நபர்கள் மீதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

Madam,

Received the above computer typed complaint on 23.07.2026 at about 10.00 hrs. After getting oral permission from the DVAC, Chennai, I am Registering a case in Kallakurichi Vigilance and Anti-Corruption, Cr.No.08/2026/KLK, u/s 7, 12 r/w 7 of

the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 12.00 hrs today on 23.07.2026 sd xxxxxx on 23.07.2026 (K.Sathiyaraj) (Deputy Superintendent of Police, V&AC, Kallakurichi).

The original FIR along with the original computer typed complaint in a sealed cover are sent to the Hon'ble Principal District and Sessions Judge, Kallakurichi and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

23.07.26

(K.Sathiyaraj)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Kallakurichi.